[1987 ஏப்ரல் 21

தாடண்டர் நகர் சமூகக் கூடம்.

439—(* வினா எண் 13390) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாடண்டர் நகர் பகுதியில் உள்ள சமூக நலக்கூடத்தை விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் திருமண மண்டபம் அந்தப் பகுதியில் இருக்கின்ற குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மாத்திரமல்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களும் பயன்படுத்துகின்ற திருமண கூடம். மழை பெய்தால் பிரச்சினை ஏற்படுகிறது. மேலே உள்ள உணவு பரிமாறும் இடம் எல்லாம் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே மாடியில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டில் கூரை அமைக்கவும், சுற்றுப்புறத்தைச் சுகாதாரமாக வைத்துக்கொள்ளவும், மதிற் சுவரை எழுப்பவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அபிவிருத்தி செய்வதற்காக நான் அதிகாரிகளிடத்திலே பேசியபொழுது நான்கு இலட்சம் ரூபாய் தேவை என்று சொன்னார்கள். எனவே, இந்த வருடமோ அல்லது அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ நிதிநிலைமையைப் பொறுத்து ஆவன செய்யப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் செய்கின்ற பணிகளில் முதலில் மேல் தளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிநிலைமை சரியானவுடன் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி. டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் சமூக நலக் கூடங்கள் இல்லாத இடங்களில் எல்லாம் ஒட்டுமொத்தமாக அதுபோன்ற சமூக நலக் கூடங்களை அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய துறையிலே இல்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. கி. மனோகரன்: * * *

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * *
கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னால் பேசிய ஒன்றும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. (கூச்சல்-குழப்பம்).

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.